www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 016

08 மே 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# பொறுத்தது போதும், பொங்கி எழு உருத்திரகுமாரா!




நாடு கடந்த தமிழீழ அரசின் இணைப்பாளர் திரு. உருத்திரகுமாரன் அவர்கள் கிட்டத்தட்ட சிறைக் கைதியாக்கப்பட்டே உள்ளார் போன்றே தெரிகின்றது. அவரால், எந்த விடயத்திலும் தெளிவாகவோ, திடமாகவோ முடிவுகள் எடுக்க முடியாத நிலையில் அவரைச் சுற்றியுள்ளவர்களின் நிர்ப்பந்தங்கள் கட்டுப்படுத்தி வருகின்றன.

தமிழீழ மக்களுக்கான 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற புதிய போர்க் களம் தற்போது சிலரது தேவைகளுக்கும், வசதிகளுக்குமானதாக மாற்றப்பட்டு வருகின்றது. குறிப்பாக, பிரான்சில் 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற சொற்பதம் திரு. மனோகரன் குழுவினருக்கு மட்டுமே சொந்தமானதாகவே ஆக்கப்பட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பான அத்தனை நகர்வுகளுக்கும் அவரே பிதாமகனாக உள்ளார். அவரே அதற்கான தர்ம கர்த்தாவாகவும் உள்ளார். அவரது விருப்பப்படியேதான் பிரான்சில் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலும் நடாத்தப்பட்டது. வேட்பாளர்களும் நிறுத்தப்பட்டனர். அவரது விருப்பப்படியேதான் தெரிவு செய்யப்பட்ட அவருக்கு விருப்பமில்லாத இரு வேட்பாளர்களது தெரிவும் இரத்துச் செய்யப்பட்டது. அதில் மிகக் கொடுமை என்னவென்றால், திரு. மனோகரன் அவர்களால் தேர்தலில் மோசடி செய்து வென்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான இருவருமே பிரான்சிலுள்ள தமிழர்கள் மத்தியில் பிரபலமான தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள். இருவருமே திரு. மனோகரனுக்கும் மேலாக, தமிழ் மக்களால் மதிக்கப்படுபவர்கள்.

அந்தக் கொடுமைகளிலும் மா கொடுமையாக, பிரான்சின் 94 வது மாகாணத்தில் போட்டியின்றித் தெரிவான நாகலிங்கம் பாலச்சந்திரன் அவர்களின் தெரிவு. அவரை எதிர்த்துப் போட்டியிட வந்த இருவர் திரு. மனோகரனின் அச்சுறுத்தல் காரணமாகக் களத்திலிருந்து பயத்துடன் ஒதுங்கிக் கொள்ள, மனோகரனின் துதி பாடியாக அவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னாள் சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி அமைப்பாளரான நாகலிங்கம் பாலச்சந்திரன் அன்றைய அமைச்சர் குமாரசூரியரின் எடுபிடியாகச் செயற்பட்டவர்.

95 ஆவது மாகாண தேர்தலிலும் பல முறைகேடுகள் இடம்பெற்றதாகப் பலர் தெரிவித்துள்ளனர். 95 மாகாணத்தில் வசிக்காத பலரும் போலி வாக்குக்களைப் போட்டதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. 95 தேர்தல் தொகுதியில் வென்றதாக அறிவிக்கப்பட்ட சிவகுருநாதன் சுதர்சன் (சுதன்ராஜ்) முன்னாள் ரி.ரி.என் பணியாளர். ரி.ரி.என். சதித் திட்டங்களால் **(2ம் பக்கம் பார்க்க...)**



**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூடப்படும் நிலை ஏற்பட்டபோது, அங்கு கிடைத்த ஆவணங்கள், கமெராக்களுடன் கம்பி நீட்டியவரே இந்த சுதன்ராஜ் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. 95 மாகாணத் தேர்தல் தொகுதியில் மோசடிகள் இடம்பெற்றதாக வேட்பாளர் திரு. பாலசுந்தரம் அவர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் எவையும் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இது குறித்த ஆதாரங்கள் விரைவில் வெளியிடப்படும் என சம்மந்தப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பிரான்சின் 77 வது மாகாணத்தில் போட்டியிட முற்பட்டவரை அன்பாகக் கண்டித்து பின்வாங்கச் செய்துவிட்டு, அங்கு, தனது சீடர்களில் ஒருவரான ஜி.ரிவி. குருபரனின் மனைவியாரான சுபாசினியைப் போட்டியின்றித் தெரிவாக்கியுள்ளார்.

மனோகரன் குழு - மக்கள் பேரவை என்ற இரு தரப்பினரிடையேயும் இடம்பெற்ற நீயா? நானா? போட்டியில் நால்வர் போட்டியின்றியே தெரிவு செய்யப்பட்டாலும் அதில் இருவர் மக்கள் பேரவை சார்பானவர்கள் என்று தெரியவருகின்றது. இறுதியாகப் போட்டியில் களம் இறங்கியவர்களில் மனோகரன் சார்பாகப் போட்டியிட்ட சிவசுப்பிரமணியம் மகிந்தன், சிவகுருநாதன் சுதர்சன் (சுதன்ராஜ்), மைக்கேல் கொலின்ஸ் என மூவரும், மக்கள் பேரவை சார்பாகப் போட்டியிட்ட சிவகுரு பாலச்சந்திரன், திருச்சோதி திருக்குலசிங்கம், சக்திதாசன் கிருஷாந்தி என மூவரும் தெரிவாகினர்.

இங்கேதான் மனோகரன் அவர்களுக்கு சங்கடம் மூண்டது. இந்தத் தேர்தலில் மக்கள் பேரவையினர் போட்டியிடுவதை மனோகரன் விரும்பாத போதும், திரு. உருத்திரகுமாரன் அவர்களது பிடிவாதமான முடிவு அதைத் தகர்த்து வழி விட்டது. பெரும்பான்மை பலம் தனது தரப்புக்கே வரும் என்று நம்பிய மனோகரன் அதற்கேற்ற காய் நகர்த்தல்களையும், சரியான போட்டியாளர்களையும் களம் இறக்கியிருந்தார். ஆனாலும், அவரது விருப்பத்தை மக்கள் நிறைவேற்றவில்லை. அதற்காகத் தனது மூளையை அதிகமாகக் கசக்கி தேர்தல் முடிந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்ட மூன்றாம் நாள் தேர்தல் நடந்த பகுதிகளில் சொற்குற்றம், பொருட்குற்றம் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு, இரண்டு தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளையும் நிராகரித்தார்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஏற்படுத்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க வந்த ஒவ்வொருவர் பெயரும், முகவரியும் பதிவு செய்யப்பட்டே வாக்களிப்பு நடைபெற்றது. அதில் மோசடி செய்வதானால், பெட்டிக்குள் வாக்குச் சீட்டுகளைப் போட்டாலும், அவர்கள் பெயர் முகவரிகளை எதைக் கொண்டு பதிந்திருக்க முடியும்? என்ற கேள்வியும் மக்களால் முன்வைக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திற்கும் பொறுப்பாளர்கள் மனோகரன் தரப்பிலான தேர்தல் கண்காணிப்பு ஆணையாளராலேயே நியமிக்கப்பட்டது. அவர் தவறு செய்திருந்தாலோ, தவறு செய்வதற்கு உடந்தையாக இருந்திருந்தாலோ அதற்கான முழுப் பொறுப்பையும் தேர்தல் ஆணையாளரே ஏற்க வேண்டும். ஒரு வேட்பாளருக்காக வாக்களிக்கும்படி இன்னொருவர் பிரச்சாரம் செய்வதை அந்த இடத்தில் இல்லாத வேட்பாளரால் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? அவர் தொடர்பில்லாத ஒரு குற்றச்சாட்டிற்கு அந்த வேட்பாளர் எப்படித் தண்டிக்கப்படக் கூடும்? என்ற கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டிய தார்மீக கடமை தேர்தல் ஆணையாளருக்கு உண்டு.

தேர்தல் ஆணையாளராக மனோகரனால் நியமிக்கப்பட்ட யூலியா மாஸ்டர் தமிழ் மக்களால் நன்றாக அறியப்பட்டவர். தமிழீழ மக்களுக்காகப் பல வருடங்களாக பல மேடைகளில் முழங்கியவர். அதற்குக் கூலியாக, தமிழீழ மண்ணில் இறுதிப் போர் நடந்த காலப் பகுதியில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத்திற்கான தேர்தலில் சுயேச்சையாகக் களம் இறங்கி, தமிழீழ மக்களின் அவலங்களுக்காகச் சேர்க்கப்பட்ட ஐம்பதாயிரம் ஈரோக்களை தனக்காகச் செலவளிக்க வைத்துத் தோல்வியைத் தழுவியவர். தொடர்ந்து நடைபெற்ற பிரஞ்சுப் பிராந்திய சபைத் தேர்தலில் தன்னை நிறுத்துமாறு கோரியதை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், விடுதலைப் புலிகளும், மக்கள் பேரவையும் கண்டு கொள்ளாமல் விட்டதால் தற்போதைக்கு அவரது புகலிடம் மனோகரன் கோட்டையாகவே உள்ளது. இப்போது அவரால் மனோகரனை மீறி எதுவும் செய்ய முடியாது.

தேர்தல் ஆணையகத்தின் இன்னொரு தியாகியான சிவா சின்னப்பொடி செல்லும் இடங்கள் எல்லாம் பேரழிவிலேயே முடிந்துள்ளது. முன்னாள் புளொட் உறுப்பினரான இவர், தமிழன் பத்திரிகையினுள் நுழைந்தார்... அது மூடப்பட்டது. ரி.ரி.என். தொலைக்காட்சிக்குள் உள் நுழைந்தார் அதுவும் சீல் வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் விசுவாசி என்றார். இப்போது, நாடு கடந்த தமிழீழ அரசினுள் நுழைந்துள்ளார்... அதுவும் ஆட்டம் கண்டுவிடுமோ என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளது.

மனோகரனுக்கு ஏற்ற பக்கவாத்தியங்களே தேர்தல் ஆணையகத்தில் உள்ளதால், மனோகரன் சிந்தனாவுக்கு ஏற்ற விதத்தில் காய் நகர்த்தல்களும் நடைபெறுகின்றது. 92 மாகாணத்திலும், 93 மாகாணத்திலும் தேர்தல் நிராகரிக்கப்பட்டு, மறு தேர்தலுக்கான உத்தரவு போடப்பட்டாலும் கருவறையில் வீற்றிருக்கும் உருத்திரகுமாரன் அவர்களின் முழுமையான அநுக்கிரகம் இதுவரை கிடைக்கவில்லை.

உருத்திரகுமாரன் நீதியின் பக்கம் நிற்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளார்.

**"பொறுத்தது போதும், பொங்கி எழு உருத்திரகுமாரா!"**

***- திறலோன்***





